# என் சோகக் கதையைக் கேளீர்!

"என் சோகக் கதையை கேளு... தாய்க் குலமே"... என்ற பாடல் ஒரு காலத்தில் மிகவும் பிரபலமானது! பலரது வாயிலிருந்தும் அடிக்கடி முணு முணுக்கப்பட்ட பாடல்! அந்தப் பாடல் குறித்து இப்போது என்ன வந்தது என்ற எண்ணம் சிலருக்குத் தோன்றலாம்! இரண்டாயிரம் ரூபாய் நோட்டுக்கு நமது அரசாங்கம் முடிவுகட்டப் போகிறது என்றதும், பாவம் அந்த நோட்டுக்கு பாடும் சக்தி இருந்தால் "என் சோகக் கதையை கேளுங்கள்..." என்று ஒரு ஒப்பாரியே வைத்திருக்கும்! இதோ; அந்த இரண்டாயிரம் ரூபாய் நோட்டே பேசுகிறது: கேளுங்கள்!

**'நான் ஜனித்தபோது மட்டுமல்ல; ஜனிப்பதற்கு முன்பும் எத்தனையோ எதிர்பார்ப்புகள்; இந்தக் குழந்தை எப்படி இருக்கப் போகிறது என்றெல்லாம் மூளையை கசக்கிக் கொண்டனர் பலர்!**

இன்று பிறக்குமா? .... நாளை பிறக்குமா? என்று எண்ணிக் கொண்டிருந்த நேரத்தில்ஒரு சுபயோக, சுபதினத்தன்று சுப லக்கனத்தில், அதாவது 2016 ஆம் ஆண்டு நவம்பர் 11ந் தேதி பெருமை மிகு இந்திய மண்ணில் என் அவதாரம் நிகழ்ந்தது! அதுவரை பிறந்திருந்த எந்தக் குழந்தைக்கும் இல்லாத அழகாய், வண்ணக் குழந்தையாய் வடிவெடுத்து வந்தேன்!

எனக்கு 'டு தவுசண்ட் ருபீஸ்' (Two thousand rupees) என ஆங்கிலம்!

'தோ ஹசார் ருபியே' என இந்தி,

'ரெண்டு வேல் ருபியாலு' எனத் தெலுங்கு!

'இரடு சாவிர ரூபாய்களு' எனக் கன்னடம்!

'இரண்டாயிரம் ரூபாய்' எனத் தமிழ்!

- இப்படி 17 மொழிகளில் பெயர் சூட்டி மகிழ்ந்தனர்!



பிறந்தது முதலே என்னைக் குறித்து பல தகவல்களும், அதனையொட்டி கேலிகளும் பரப்பப்பட்டன. என்னை யாரும் பதுக்கி வைக்க முடியாது. அப்படி பதுக்கினாலும் பதுக்கியவர்கள் சிக்கிக் கொள்ளுமளவு என்னுள் 'சிப்ஸ்' உள்ளது என்ற செய்தியை பலர் பரப்ப, 'இரண்டாயிரத்தில் சிப்ஸ்' என என் மீது ஒரு நேந்தரங்காய் சிப்சை வைத்து புகைப்படம் எடுத்து அதனை 'நெட்டிசன்'கள் பரப்பி சந்தோஷம் கொண்டாடியது போல பல நிகழ்வுகள் நடந்தன!

என்னை இப்படி பலவிதமாக நோக்கி கொஞ்சி குதூகலித்த 'நெட்டிசன்'கள் இப்போது பிறப்பு 8.11.2016, இறப்பு 30.9.2023 என்று என் படத்தை வெளியிட்டு கண்ணீர் அஞ்சலி செலுத்தியுள்ளது என் நெஞ்சை எப்படி எல்லாம் பிழிகிறது தெரியுமா? அந்த வேதனையை அனுபவிப்பவர்கள்தான் உணர முடியும்!

**அந்த நெட்டிசன்கள் குறிப்பிட்டுள்ளது போல என் அகால மரணத்துக்கு நாள் குறிப்பிடப்பட்டு விட்டது! எனது தம்பி 1000 ரூபாய் சாவுச் செய்தியை பிரதமரே வந்து நேரில் அறிவித்தார்! அந்த பாக்யம் கூட எனக்குக் கிடைக்கவில்லை. எனது இறப்பை ஒரு அதிகாரிதான் அறிவிக்கிறார்; நான் அறிவித்த அதிகாரியை குறைத்து மதிப்பிடவில்லை; ஆனால் பிரதமர் வாயால் கூட அறிவிக்க இயலாது போகும் அளவு நான் என்ன பாவம் செய்தேன்?**

இருந்த காலம் குறுகிய காலம்தான் என்றாலும் நான் வாழ்ந்த வாழ்வு என்றும் மறக்க முடியாத ஒன்று! கள்ள மார்க்கெட்காரன் - 'கருப்புப் பண'க்காரன் - கார்ப்பரேட் அதிபர்கள் - அரசியல் வாதிகள் என எல்லார் கையிலும் தவழ்ந்தாலும் தேர்தல் காலங்களில் வாக்காளப் பெருமகன் என்னை கண்டதும் என்னை உச்சி மோந்து அவன் கொண்டாடியபோது அவன் முகத்தில் தோன்றிய ஆனந்தத்தைக் கண்டு நான் பூரித்ததுண்டு. அற்ப ஆயுளில் போகப் போகும் நான் வாழ்ந்த காலங்கள் கொஞ்சமே.... ஆனால் நினைவில் சுமந்து செல்வதோ ஏராளம்!




எனது இறப்பை உடனடியாக அறிவித்து விடவில்லை... பெருந்தலைவர்கள் சாவை உடனடியாக அறிவித்துவிட்டால் நாடு நிலை குலைந்துவிடும் என்பதற்காக ஐ.சி.யூ.வில் ஆக்சிஜன் கொடுத்து ஓரிரு நாளும், வென்டிலேட்டரில் சில நாட்கள் என நாள் கடத்தி சிறுகச் சிறுக மக்களைத் தயார்படுத்தி பின்னர் மூச்சு நின்றபோதும் எக்மோ (Ecmo) சிகிச்சை என்று கூறி ஒரு சில மணித்துளிகள் பிரிந்து சென்ற உயிரைப் பிடித்து வைப்பார்களே அதுபோலத்தான், என்னை நம்பிய மக்கள் அதிர்ச்சியடையக் கூடாதே என்பதற்கு கால அவகாசம் தந்துள்ளனர். செப்டம்பர் 30 வரை என் உயிரைப் பிடித்து வைத்திருக்கிறார்கள்!

**உயிர் போகவில்லை என்றாலும் பலர் எண்ணத்தில் உயிர் போன ஜடமாகிவிட்டேன்! இப்போது சிலர் என்னைத் தீண்டக் கூட அஞ்சுகிறார்கள்! எல்லாரையும்விட மதிப்பு வாய்ந்தவனாகக் கருதப்பட்ட நான்இப்போது மதிப்பிழந்து கிடக்கிறேன்! காடு வா... வா.. என அழைக்கும் நிலையில் கிடக்கும் எனக்கு யார் தான் மதிப்பளிப்பார்கள்? எனக்கு சாவதைக் குறித்து வருத்தமில்லை! எனக்குள்ள வருத்தமெல்லாம், 'இந்திய பொருளாதாரத்தின் நாணய தேவையை விரைவாக பூர்த்தி செய்வதற்காக உருவாக்கப்பட்ட என்னை, கருவேப்பிலை போல தங்கள் காரியம் முடிந்ததும் தூக்கி எறிந்து விட்டார்களே என நான் வருந்தவில்லை, அதே நேரத்தில் எனது உதயமும், அழிவும் மக்களிடம் குழப்பத்தையும், கோபத்தையும் உருவாக்கி என்னால்தான் எல்லாம்' - என்று சபித்துக் கொண்டிருக்கிறார்களே அதை நினைத்துதான் சாகும் தருவாயிலும் வெந்து நொந்து செத்துக் கொண்டிருக்கிறேன்!**




**'இல்லாதவனுக்கு ஆயிரம் கவலை இருப்பவனுக்கு ரூ.2000 தான் கவலை'**

என்றெல்லாம் நெட்டிசன்கள் 'கலாய்'க்கின்றனர்! என்னை உருவாக்கி அழித்திட நடத்திய விளையாட்டுக்கு ஏறத்தாழ 5000 கோடி ரூபாய் செலவழித்ததாகவும் நெட்டிசன்கள் விபரங்களை வெளியிட்டுள்ளனர்! ஒருபக்கம் சமையல் கியாஸ் விலை ஏறியது. பெட்ரோல், டீசல் விலையும் உயர்ந்தது. உயர்ந்த நிலையிலேயே உள்ளது! கருப்புப் பணம் ஒழியும் என்ற சவடால் பயங்கர வாதத்துக்கு மூடுவிழா நடத்தப்படும் என்ற மார்தட்டல், பொருளாதார புரட்சி என்று விண்ணும் மண்ணும் அதிர கொடுத்த குரல். கள்ளப்பணத்தின் வேரறுக்கப் படும் என்று மக்களுக்கு தரப்பட்ட 'இனிப்பு' எல்லாம் என்ன ஆனது?

**அவசர முதிர்ச்சியற்ற நடவடிக்கைகள் காரணமாக பொருளாதார வளர்ச்சி விகிதம் (2016ல்) 7.9 விகிதத்தில் இருந்து 2017ல் 5.7 சதவிகிதமாக குறைந்தது. நாற்பது ஆண்டுகளுக்கு பின்னோக்கி சென்று விட்டோமோ எனப் பொருளாதார மேதைகள் அஞ்சினர்!**

எதற்கும் காது கொடுக்காது அறிவிலித்தனமாக, விளைவுகளைப் பற்றி எந்த சிந்தனையுமின்றி அறிவித்த அறிவிப்புக்காக என்னை உருவாக்கி பலி கடாவாக ஆக்கிவிட்டார்கள். எதற்கு வேண்டுமானாலும் நிலையற்ற



ஐயாயிரம் கோடி அராஜகம்!

அச்சடிக்கப்பட்ட 2000 ரூபாய் நோட்டுக்களின் எண்ணிக்கை சுமார் 375 கோடி.

ஒரு நோட்டு அச்சடிக்க ஆன செலவு 4 ரூபாய்.

அச்சடிச்ச செலவு மட்டும் 1500 கோடி

இந்த நீளமான நோட்டை ஏடிஎம் மெசின்களில் அடுக்க முடியாததால் சுமார் 2 இலட்சம்.மெசின்களை மாற்றியமைக்க சுமார் 1400 கோடி.

வங்கி ஊழியர்களுக்கு பயிற்சிக்கான செலவு 15 இலட்சம்

375 கோடி நோட்டுகளை நாடு முழுக்க லாரிகளில் கொண்டு சென்று விநியோகிக்க ஆன செலவுஎன எல்லாத்தையும் சேர்த்தால்,

2000 ரூபாய் நோட்டுகளை அறிமுகப்படுத்தி, திரும்பப் பெற்ற, ஆன செலவு சுமார் 5000 கோடி ரூபாய்

தன்மை இருக்கலாம். நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் என்னைப் போன்றவர்களுக்கு நிலையற்ற தன்மை உருவாக்கினால்; நாடு ஸ்தம்பிக்கும்! இன்று நான் விழி பிதுங்கி கிடப்பது போல நாட்டின் பொருளாதாரம் நிலையற்ற நிலை அடைந்து விழி பிதுங்கி விடும்!

**எனக்கு செப்டம்பர் 30வரை உயிரிருக்கும் என ரிசர்வ் பேங்க் அறிவித்தாலும், பொதுமக்கள் உயிரற்ற பிணமாகவே கருதுகின்றனர்! ஒரு காலத்தில் என்னைத் தேடித் தேடி சேர்த்தவர்கள், இப்போது என்னைத் தீண்டத் தகாதவனாகப் பார்க்கின்றனர்! என்னை விடுங்கள்; இனியாவது ரிசர்வ் வங்கியின் உத்தரவாதங்களை ஏற்கத் தயாராக மக்கள் இல்லை என்ற நிலை உருவாக்கப்படுவது நாட்டின் பொருளாதாரத்துக்கு மிகப்பெரிய சீரழிவை உருவாக்கிவிடும் என்பதை உணர்ந்து செயல்பட்டால் சரி! நான் சாவதைப் பற்றி கவலைப்படவில்லை; என்னைக் கொல்வதின் மூலம் நாட்டு மக்களிடம் என்னைப் போன்றவர்கள் மீது உள்ள நம்பிக்கையை கொன்றுவிடாதீர்! நம்பிக்கை போய்விட்டால் அதனை மீண்டும் உருவாக்குவது மிகமிகக் கஷ்டம்!**

பிறந்து, வாழ்ந்தது கொஞ்ச காலம் தான்! என்னைப் பிரசவிக்க ஏறத்தாழ 5000 கோடி செலவிட்டதாக ஒரு நெட்டிசன் என் புகைப்படத்தோடு, 'ஐயாயிரம் கோடி அராஜகம்' எனத் தலைப்பிட்டு தந்த தகவல்கள் கூறுகின்றன!


சிலந்தி

சாகக்கிடக்கும் எனக்கு பிரதமர் ஒரு அனுதாப செய்தியாவது கூறினால், எனக்கு நிம்மதியாவது கிடைக்கும்!

என் சோகக் கதையினை முழுவதுமாக வடித்திட இயலாமையால் இயன்றவரை கூறிவிட்டேன்! 'வாழ்ந்தாலும் ஏசும், தாழ்ந்தாலும் ஏசும்... வையகம் இதுதானடா' - என்று எப்போதோ கேட்ட பாடல் என் காதுகளில் இப்போது ரீங்காரம் செய்து கொண்டிருக்கிறது! மறுபிறவி என்று ஒன்றிருந்து அதனை எடுத்தால் மீண்டும் சந்திக்கிறேன்!

2000 ரூபாய் நோட்டு தனது சோகக் கதையை சொல்லி விடைபெறும் போது, அருகிலிருந்த புதிய 500 ரூபாய் நோட்டு கண்களில் நீர் தளும்ப பாடுகிறது

**போகாதே போகாதே என் சகோதரா...**
**பொல்லாத சொப்பனம் நானும் கண்டேன்.**
**பொதுமக்கள் பொருமிடக் கண்டேன்.**
**பொருளாதாரம் தள்ளாடக் கண்டேன்.**
**கள்ளப்பணம் சேர்ப்பவன் கதறக் கண்டேன்.**
**அரசியல்வாதிகள் அல்லாடக் கண்டேன்.**
**நம்பகத்தன்மை நாசமாகக் கண்டேன்.**

- விழியில் வழிந்தோடும் நீரைத் துடைத்தவாறு 2000 ரூபாய் நோட்டு 'டாடா' கூறுகிறது!